بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

﴿ وَعَدَ اللَّهُ الَّذِينَ آمَنُوا مِنكُمْ وَعَمِلُوا الصَّالِحَاتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْأَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِينَ مِن قَبْلِهِمْ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِينَهُمُ الَّذِي ارْتَضَىٰ لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُم مِّن بَعْدِ خَوْفِهِمْ أَمْنًا ۚ يَعْبُدُونَنِي لَا يُشْرِكُونَ بِي شَيْئًا ۚ وَمَن كَفَرَ بَعْدَ ذَٰلِكَ فَأُولَٰئِكَ هُمُ الْفَاسِقُونَ ﴾


**மத்திய ஊடக அலுவலகம்**

Hizb ut Tahrir

வெளியீட்டு இல: ஹிஜ்ரி 1442/017 | 10 ஜுமாதா வெள்ளிக் கிழமை | கி.பி 25/12/2020


## ஊடக வெளியீடு

### *“வாழ்விலும், சாவிலும் வேதனையை அனுபவிக்கும் இலங்கை வாழ் முஸ்லிம்கள்!”* என்ற ஒரு சர்வதேச பிரச்சாரத்தை ஹிஸ்புத் தஹ்ரீரின் மத்திய ஊடக அலுவலகத்தின் பெண்கள் பிரிவு ஆரம்பித்து வைக்கிறது!

இலங்கையில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் கடுமையான அநீதிகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இலங்கை அரசாங்கத்தின் இழிவான கட்டாய தகனக் கொள்கையை முடிவுக்குக் கொண்டுவரவும் கோருவதற்காக, ஹிஸ்புத் தஹ்ரீரின் மத்திய ஊடக அலுவலகத்தின் பெண்கள் பிரிவு சர்வதேச பிரச்சாரத்தைத் தொடங்குவதாக இந்த ஊடக வெளியீட்டின் ஊடாக தெரிவித்துக் கொள்கிறது.இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் இலங்கையில் இறப்பேய்திய முஸ்லிம்களில், கொவிட்-19 பரிசோதனையில் நேர்மறையாக முடிவு கூறப்பட்டவர்கள், அவர்களின் இஸ்லாமிய நம்பிக்கைக்கு இணங்க நல்லடக்கம் செய்வதற்கு மாற்றமாக கட்டாயத் தகனம் செய்யப்பட்டு வருகின்றனர். உண்மையில், இவ்வாறு தகனம் செய்யப்பட்ட முஸ்லிம்களின் பலருக்கு கொவிட் சோதனைகள் செய்யப்படவும் இல்லை. மேலும் சிலருக்கு பரிசோதனை முடிவுகள் எதிர்மறையாகவும் வந்துள்ளன. டிசம்பர் 9 ஆம் தேதி, மரணித்த வெறும் 20 நாள் நிரம்பிய பச்சிளம் பாலகன் ஒன்றும் கொவிட் தொற்றுடையது என்று கூறப்பட்டு பெற்றோர்களின் அனுமதியின்றித் தகனம் செய்யப்பட்டது. அதே நேரம், இலங்கையின் உச்ச நீதிமன்றம் கடந்த டிசம்பர் 1ஆம் திகதி, இந்தக் கட்டாயத் தகனக் கொள்கையை எதிர்த்து முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ குடும்பங்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் தாக்கல் செய்த 12 மனுக்களுக்கான வழக்குகளை நீதி மன்றில் செவிமடுக்க மறுத்து எவ்விதக் காரணமும் சொல்லாது ரத்தும் செய்தது. இச்செயல் மதச்சார்பற்ற ஜனநாயக அமைப்புகளின் கீழ் ஒடுக்கப்பட்டவர்கள் தமக்கு எதிரான அநீதிகளை முறியடிப்பதற்கு எவ்வளவு தூரம் சக்தியற்று இருக்கிறார்கள் என்பதை எமக்கு பிரதிபலித்துக் காட்டியது.

இலங்கையில் வகுப்புவாத எண்ணம் கொண்ட பௌத்த தேசியவாத ஆட்சி, முஸ்லிம்கள் மனித உடலை தகனம் செய்வதை அதற்கு செய்யும் இழிவாகக் கருதுவதை அறிந்து கொண்டே இந்த ஓர வஞ்சனையான கொவிட்-19 தீர்மானத்தை வெளியிட்டு இருக்கிறது. அது புகழ்பெற்ற சர்வதேச வைரஸ் நோயியல் மற்றும் தொற்று நோயியல் நிபுணர்களின் ஆலோசனையையும், உலக சுகாதார நிறுவனத்தின் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்டவர்கள் பொது சுகாதாரத்திற்கு எந்த ஆபத்தும் இல்லாமல் பாதுகாப்பாக அடக்கம் செய்யப்படலாம் என்ற வழிகாட்டலையும் புறக்கணித்து இருக்கிறது. எனவே இந்த இஸ்லாமிய வெறுப்புத் தீர்மானமானது முஸ்லீம் மக்களுக்கு எதிராக அவர்களின் உணர்வுகளை ஆழமாகப் பாதிக்கும் நோக்கில் செயல்படுத்தப்பட்ட ஒரு கொள்கை என்பது அப்பட்டமாக தெளிவாகி உள்ளது. இலங்கை அரசாங்கம் இந்த தொற்றுநோயை பௌத்த தேசியவாத முஸ்லீம்-விரோத சக்திகளிடமிருந்து தனது ஆட்சிக்கு மேலும் ஆதரவைப் பெறுவதற்கும், நாட்டில் தனது இஸ்லாமிய எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை மேலும் மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தியுள்ளது என்பதுதான் உண்மை. ரோஹிங்கியா முஸ்லிம்களைத் துன்புறுத்திய மியான்மாரின் சகாக்களால் உத்வேகம் பெற்ற பொது பல சேனா (பிபிஎஸ்-பௌத்த வலிமைப் படை) போன்ற குழுக்களாலும், கடும்போக்கு பௌத்த துறவிகளாலும் நாட்டில் உருவான தீவிரவாத பௌத்த தேசியவாதத்தின் எழுச்சி காரணமாக, முஸ்லிம்கள் பல ஆண்டுகளாக பாகுபாட்டுக்கும், ஒடுக்குமுறைக்கும், வன்முறைக்கும் உள்ளாகி வருகின்றனர். உண்மையில், ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டுவதற்கு காரணமான மியான்மாரின் '969 இயக்கம்' துக்கும், பொதுபல சேனாவுக்கும் இடையே இஸ்லாமிய எதிர்ப்பு ஒப்பந்தம் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளது. பிராந்தியத்தில் முஸ்லிம்களுக்கும், இஸ்லாத்திற்கும் எதிராக மற்ற பௌத்த குழுக்களை அணிதிரட்டுவதற்கு இரு அமைப்புகளும் ஒரு கூட்டணியை அமைப்பதாக முன்பு உறுதியளித்திருந்தன. சமீபத்திய ஆண்டுகளில், முஸ்லிம்கள் அனைத்து வகையான துஷ்பிரயோகங்களையும் அனுபவித்துள்ளனர் : ஹிஜாப் அணிந்த முஸ்லிம் பெண்கள்

துன்புறுத்தப்பட்டார்கள். அவர்கள் அரசு கட்டிடங்கள், சில கடைகள், பாடசாலைகள் போன்றவற்றுக்குள் நுழையும்போதும், சில பொழுதுகளில் மருத்துவமனை சிகிச்சை பெறும்போதும் கூட இஸ்லாமிய ஆடைகளை அகற்றும்படி கூறப்பட்டார்கள்; சமூகத்தில் நிகாப் தடை அமல்படுத்தப்பட்டது; முஸ்லீம் வணிகங்களை புறக்கணிப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது, தயாரிப்புகளில் ஹலால் இலாஞ்சினைகளைப் பொறிப்பது திரும்பப் பெறப்பட்டது. மேலும் நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை தன்னிச்சையாக கைதுசெய்தது மற்றும் இஸ்லாமிய பொருட்களுக்காக (ஒலிப்பதிவுகள், பிரசுரங்கள், நூல்கள் போன்ற) முஸ்லீம் வீடுகளை பாரபட்சமாக தேடியது, முஸ்லீம்களின் வீடுகள், பள்ளிவாசல்கள், மற்றும் வணிக நிறுவனங்கள் மீது குண்டர்களால் தாக்குதல்கள் நடத்தியது என்று அனைத்தும் இடம்பெற்றன. இவையெல்லாம் போதாதற்கு இப்போது, முஸ்லிம்கள் தங்கள் அன்புக்குரியவர்கள் மீது இறுதி மதச் சடங்குகளைக்கூட செய்ய முடியாமலும், கண்ணியத்துடன் மரணிக்க முடியாமலும் தவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்பார்த்தபடியே, உலகளாவிய ஒடுக்கப்பட்ட முஸ்லிம்களை வழக்கமாக கைவிடும் முஸ்லிம் அரசுகள் உட்பட உலக அரசாங்கங்கள், இலங்கை முஸ்லிம்களின் உதவிக்காக முன்வரவும் தவறிவிட்டன. இருப்பினும், இஸ்லாமிய உம்மாவாகிய நாம் இலங்கையில் வாழும் நமது முஸ்லிம் சகோதர, சகோதரிகளை ஒருபோதும் கைவிட மாட்டோம். ஹிஸ்புத் தஹ்ரீரை பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்கள் அவர்களுக்கு ஆதரவாகவும், அவர்கள் அனுபவிக்கும் கொடூரமான அநீதிகளுக்கு எதிராகவும் உலகளாவிய அளவில் குரல் எழுப்புவோம். மேலும், அவர்களைப் பாதுகாக்கும் உண்மையான காப்பரணான, கேடயமான, அல்லாஹ்(சுபு)வின் முறைமையான கிலாஃபாவை நபி(ஸல்) வழியில் இவ்வுலகில் மீண்டும் நிலைநாட்ட எங்களாலான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடுவோம். அந்த கிலாஃபா ஒடுக்கப்பட்டவர்களுக்கு சரணாலயமாகவும், முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களின் உரிமைகளுக்கும், தீனுக்கும் பாதுகாவலராகவும் தொழிற்படும். இன்ஷா அல்லாஹ்(சுபு). எமது இந்த முக்கிய விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை ஆதரிப்பதற்காக நீதிக்காக நிற்கும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அல்லாஹ்(சுபு) கூறுகிறான் : وَإِنِ اسْتَنصَرُوكُمْ فِي الدِّينِ فَعَلَيْكُمُ النَّصْرُ ***"மேலும் அவர்கள் மார்க்க விஷயத்தில் உங்களிடம் உதவி தேடினால், உதவி புரிவது உங்கள் மீது கடமையாகும் "*** (அல்-அன்ஃபால்: 72)

**இந்த பிரச்சார நடவடிக்கையை பின்தொடர்வதற்கு:**

http://www.hizb-ut-tahrir.info/en/index.php/hizbuttahrir/20600.html

**Facebook page: Women's Section CMO – HT**

**DR. நஸ்ரின் நவாஸ்**

**இயக்குநர் - பெண்கள் பிரிவு**

**மத்திய ஊடக அலுவலகம்**

**ஹிஸ்புத் தஹ்ரீர்**

**Tele-Fax.:** 009611307594 **Mobile:** 0096171724043

**E-Mail:** ws-cmo@hizb-ut-tahrir.info

**Hizb ut Tahrir Offizielle Website**
www.hizb-ut-tahrir.org
**Hizb ut Tahrir Media Website**
www.hizb-ut-tahrir.info